©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 6] CHENNAI, WEDNESDAY, FEBRUARY 11, 2026
Thai 28, Visuvaavasu, Thiruvalluvar Aandu–2057

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| HOME DEPARTMENT | |
| The Delhi Special Police Establishment Act, Notifications .. .. .. .. | 64 |
| The Commercial Court Act, 2015 - Transferred and Posted as District Judge in Chennai .. | 64 |
| HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT | |
| Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Landlords and Tenants Act, 2017 - Notification .. .. | 64 |
| தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை | |
| Industrial Tribunal for Adjudication .. .. | 64-66 |
| Labour Courts for Adjudication .. .. .. | 66-68 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

HOME DEPARTMENT

**Notifications under the Delhi Special Police Establishment Act.**

*[G.O. (2D). No.23, Home (Citizenship), 21st January 2026, தை 7, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/HO/42/2026.— Under section 6 of the Delhi Special Police Establishment Act, 1946 (Central Act 25 of 1946), the Governor of Tamil Nadu hereby accords consent to the extension of the powers and jurisdiction of members of the Delhi Special Police Establishment in the whole of the State of Tamil Nadu for registration of a case and to conduct investigation against Shri. Abhinandan Singh, Stenographer, Non-Corporate Ward-17(4), Income Tax Department, Greams Road, Chennai under section 7 of the Prevention of Corruption Act, 1988 (Central Act 49 of 1988) (as amended in 2018).

*[G.O. (2D). No.26, Home (Citizenship), 21st January 2026, தை 7, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/HO/43/2026.— Under section 6 of the Delhi Special Police Establishment Act, 1946 (Central Act 25 of 1946), the Governor of Tamil Nadu hereby accords consent to the extension of the powers and jurisdiction of members of the Delhi Special Police Establishment in the whole of the State of Tamil Nadu to conduct preliminary enquiry against (1). Shri. Naresh Chand, Deputy Superintendent, Horticulture Division, Archaeological Survey of India, No.III, 2nd Floor, Mysore, (2). Shri. Paneer Selvam, Senior Horticulture Assistant, Mahabalipuram, Tamil Nadu, (3). Shri. G.Natarajan, Horticulture Assistant Grade-I, Thanjavur, Tamil Nadu, (4). Shri. K. Prasath, Horticulture Assistant Grade-I, Vellore, Tamil Nadu and (5). Contractor Shri. Kuldeep Singh for clearing fake bills of maintenance of Archaeological gardens at Mahabalipuram, Vellore and Thanjavur in the State of Tamil Nadu.

*[G.O. (2D). No.29, Home (Pol-VIII), 23rd January 2026, தை 9, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/HO/44/2026.— Under section 6 of the Delhi Special Police Establishment Act, 1946 (Central Act 25 of 1946), the Governor of Tamil Nadu hereby accords consent to the extension of the powers and jurisdiction of members of the Delhi Special Police Establishment in the whole of the State of Tamil Nadu for registration of a Regular Case against (1) Smt. N. Anuradha, Senior Accounts Officer (under suspension) (Emp ID. 2527) (2) Sh. S.Palanikumarasamy, A.O, Gr.II (Emp ID 2743), (3) Sh. J. Rojers Joseph Durairaja, Data Processing Officer/EDP (Emp ID. 2764), (4) Sh. C.Kaliappan, Assistant Director/EDP (Emp ID 2924) and (5) Sh. A. Shanthana Shankar, Senior Assistant/CHD (Emp. ID 10002406) (6) Sh. Manikandan Prabhu S/o Rajarathinam & (7) Sh. Kishore Babu S/o B. Shanmugaraj all are residents of Tuticorin, Tamil Nadu for the alleged commission of punishable offences u/s 13(2) r/w 13(1)(d) of PC Act 1988 (as amended in 2018) and U/s 61(2) r/w 318(4), 316(2),316(5), 338,336(3), 340(2) & 344 BNS 2023. (U/s 120-B, r/w 420,406,409,467,468,471,477-A of IPC) and 66C of IT Act 2000 and any other offence committed in the course of transaction arising out of the same fact, in regard to this case, within the whole State of Tamil Nadu.

**Transferred and Posted as District Judge in Chennai under the Commercial Courts Act, 2015**

*[G.O. (Rt). No.65, Home (Courts-II), 22nd January 2026, தை 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/HO/45/2026.— In exercise of the powers conferred by sub-section (3) of Section 3 of the Commercial Courts Act, 2015 (Central Act 4 of 2016), the Governor of Tamil Nadu with the concurrence of the High Court, Chennai hereby makes the following appointment on transfer:-

| *Sl. No.* (1) | *Name and Designation* (2) | *Transferred and posted as* (3) |
|---|---|---|
| 1. | Thiru.S.Ganapathisamy, District Judge, Registrar (IT-*cum*-Statistics), High Court of Madras, Chennai. | Principal Judge, Commercial Court, Chennai in the existing vacancy. |

DHEERAJ KUMAR,
*Additional Chief Secretary to Government.*

HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT

**Notifications under the Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Landlords and Tenants Act, 2017**

*[G.O. Ms. No.8, Housing and Urban Development (HB1(1)), 20th January 2026, தை 6, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/HOU/46/2026.—In exercise of the powers conferred by clause (c) of section 3 of the Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Landlords and Tenants Act, 2017 (Tamil Nadu Act 42 of 2017), the Governor of Tamil Nadu hereby exempts all the premises owned by the Hindu, Christian and Muslim religious public trusts and public charitable trusts from all the provisions of the said Act.

KAKARLA USHA,
*Additional Chief Secretary to Government.*

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**

**Disputes between workmen and Managements referred to Industrial Tribunal for Adjudication**

**மதர்சன் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜிஸ் அண்டு இன்ஜினியரிங், காஞ்சிபுரம் மாவட்டம்**

*[அரசாணை (டி) எண் 23, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 20 ஜனவரி 2026, தை 6, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/47/2026.—காஞ்சிபுரம் மாவட்டம், மதர்சன் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜிஸ் அண்டு இன்ஜினியரிங் என்ற நிர்வாகத்திற்கும் காஞ்சிபுரம் மாவட்டம், உழைப்போர் உரிமை இயக்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கை எண்கள் 1, 2, 4, 5, 6 (5 கோரிக்கைகள்) ஆகியவற்றை கீழ்க்காணும்

எழுவினாக்களுடன் சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண்.1**

01.04.2024 முதல் 3 ஆண்டுகளுக்கு அடிப்படை சம்பளத்தில் ரூ.10,000/–உயர்வு வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.2**

01.04.2024 முதல் நிலையான பஞ்சபடியாக ரூ.10,000 உயர்வு வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.4**

01.04.2024 முதல் வீட்டு வாடகைப்படியாக ரூ.10,000 உயர்வு வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.5**

01.04.2024 முதல் வருடாந்திர ஊதிய உயர்வு ரூ.2,000/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.6**

01.04.2024 முதல் சலவைப்படி மாதம் ரூ.1,000 வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நாடி ஏர்டெக்னிக் பிரைவேட் லிமிடெட், சென்னை மாவட்டம்**

*[அரசாணை (டி) எண் 25, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 20 ஜனவரி 2026, தை 6, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/48/2026.— சென்னை மாவட்டம், நாடி ஏர்டெக்னிக் பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் சென்னை மாவட்டம். T.C.F. நாடி தொழிலாளர்கள் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கைகளில் கீழ்க்காணும் கோரிக்கை எண்கள் 1, 2, 5, 8 மற்றும் 10 (5 கோரிக்கைகள்) ஆகியவற்றை சென்னை தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு. இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாக்களுடன் சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண்.1**

நிர்வாகத்தின் உற்பத்தி திறன் உயர்ந்துள்ளது என்றும். கம்பெனியின் ஆண்டு வருமானம் பெருகியுள்ள நிலையில் ஊதியத்தில் அதற்கான பிரதிபலிப்பு இருத்தல் வேண்டும் என்ற முறையில் தற்போது பெறும் ஊதியத்தில் இருந்து 30 சதவீத உயர்வு வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.2**

தற்போது அகவிலைப்படியுடன் அடிப்படைச்சம்பளம் இணைந்து அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுகின்றது என்றும், இதை மாற்றி தமிழக அரசு அறிவிக்கின்ற இன்ஜினியரிங் தொழிலுக்கான அகவிலைப்படியினை 2010–ஆம் ஆண்டிற்கான புள்ளி அடிப்படையில் வழங்கிட வேண்டும் என்றும், இதனால் விலைவாசி உயர்விற்கு ஏற்ற முறையில் ஆண்டுதோறும் உயரும் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் நேர்வில் விலைவாசி உயர்வு ஈடுகட்ட முடியும் என்றும், ஆகவே அகவிலைப்படி தனியாக வழங்கிட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.5**

5 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு LTA வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.8**

குளியல் சோப் 125 கிராம் ஹமாம் 3 எண்ணிக்கை, தேங்காய் எண்ணெய் 200 மி.லி, டவல் மற்றும் ரெயின்கோட் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.10**

இரவு பணியில் வழங்கப்படும் அலவன்ஸ் ரூ.200 வழங்க வேண்டும் என்றும், ஸ்நாக்ஸ், பிரட் பாக்கெட், பால் 150 மி.லி, வாழைப்பழம் 2 வழங்கிட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப்

பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### Disputes between workmen and Managements referred to Labour Courts for Adjudication

**1. Larsen & Toubro Ltd, L&T கப்பல் கட்டும் தளம் சென்னை மாவட்டம். 2. L&T கப்பல் கட்டும் தளம் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், சென்னை மாவட்டம், 3. L&T எனர்ஜி ஹைட்ரோகார்பன் (மாடுலர் பேப்ரிகேஷன் பெசிலிட்டி), திருவள்ளூர் மாவட்டம் மற்றும் 4. மெரைன் இன்பிராஸ்ட்ஸ்டக்சர் டெவலப்மெண்ட் பிரைவேட் லிட், திருவள்ளூர் மாவட்டம்**

*[அரசாணை (டி) எண் 21, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 20 ஜனவரி 2026, தை 6, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/49/2026.—சென்னை மாவட்டம், Larsen & Toubro Ltd, L&T கப்பல் கட்டும் தளம், சென்னை மாவட்டம், L&T கப்பல் கட்டும் தளம் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், திருவள்ளூர் மாவட்டம், L&T எனர்ஜி ஹைட்ரோகார்பன் (மாடுலர் பேப்ரிகேஷன் பெசிலிட்டி) மற்றும் திருவள்ளூர் மாவட்டம், மெரைன் இன்பிராஸ்ட்ஸ்டக்சர் டெவலப்மெண்ட் பிரைவேட் லிட் ஆகிய நிர்வாகங்களுக்கும் சென்னை மாவட்டம், ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பிற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கீழ்க்காணும் கோரிக்கை எண்கள் 1, 2, 3 (3 கோரிக்கைகள்) ஆகியவற்றை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

#### எழுவினாக்கள்

**கோரிக்கை எண்.1**

தொழிலாளர்களான 1. திரு. அருள், 2. திரு. வினோத், 3. திரு. உதயகுமார். 4. திரு. கலைவாணன், 5. திரு. தாஸ், 6. திரு. பிரசாத், 7. திரு. அன்பு, 8. திரு. பிரகாஷ் மற்றும் 9. திரு. பாண்டியன் ஆகிய 9 தொழிலாளர்களை முதல் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் நேரடி தொழிலாளர்கள் என அறிவிக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.2**

தொழிலாளர்களான 1. திரு. அருள், 2. திரு. வினோத், 3. திரு. உதயகுமார், 4. திரு. கலைவாணன், 5. திரு. தாஸ், 6. திரு. பிரசாத், 7. திரு. அன்பு, 8. திரு. பிரகாஷ் மற்றும் 9. திரு. பாண்டியன் ஆகிய 9 தொழிலாளர்களுக்கும் நிர்வாகம் தற்காலிக பணிநீக்கம் செய்து உத்தரவு வழங்கிய 24.02.2016 முதல் 25.02.2022 வரையிலான காலத்திற்கு அவர் பணியில் இருந்திருந்தால் கிடைக்ககூடிய முழு ஊதியம் மற்றும் ஊதிய உயர்வு, போனஸ் உள்ளிட்ட அனைத்து பணப் பலன்களும் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.3**

1. திரு. அருள், 2. திரு. வினோத், 3. திரு. உதயகுமார், 4. திரு. கலைவாணன், 5. திரு. தாஸ், 6. திரு. பிரசாத், 7. திரு. அன்பு, 8. திரு. பிரகாஷ் மற்றும் 9. திரு. பாண்டியன் ஆகிய தொழிலாளர்களின் தற்காலிக பணிநீக்க உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் நிர்வாகம் தன்னிச்சையாக பணி மறுத்து வருவதை தொடர்ந்து 25.02.2022 முதல் முழு ஊதியம், பணி தொடர்ச்சி மற்றும் இதர சலுகைகளுடன் மீண்டும் பணி வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கடலூர் சிப்காட் பகுதியில் இயங்கி வரும் பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட்,.**

*[அரசாணை (டி) எண் 27, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (பி2)த் துறை, 22 ஜனவரி 2026, தை 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/50/2026.— கடலூர் சிப்காட் பகுதியில் இயங்கி வரும் பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற நிருவாகத்திற்கும் பாண்டியன் கெமிக்கல்ஸ் நாம் தமிழர் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் சிப்காட் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழிற்தகராறை பின்வரும் எழுவினாவுடன் கடலூர், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV / 1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, கடலூர், தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

#### எழுவினாக்கள்

**கோரிக்கை எண். 2**

ஊதிய உயர்வு தற்போது உள்ள மொத்த ஊதியத்தில் (Gross Salary) ரூபாய் 25000 உயர்த்தி வழங்கிட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 6**

மாறுகின்ற பஞ்சப்படி (VDA) அமல்படுத்தி புள்ளி ஒன்றிற்கு ரூபாய் 5 வழங்கிட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 11**

இரவு பணிக்கான படியாக ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் நாள் ஒன்றுக்கு ரூ.100 கூடுதலாக வழங்கிட வேண்டுமென

தொழிற்சங்கம் கோரியது நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 18**

ஆயுத பூஜை பண்டிகை நாட்களில் தற்போது 250 கிராம் இனிப்பு வழங்கி வருவதை மாற்றி இனிவரும் காலங்களில் ஒரு கிலோ இனிப்பும் ஒரு கிலோ காரமும் வழங்கிட வேண்டுமென தொழிற்சங்கம் கோரியது நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 32**

தொழிலாளர்களுக்கு அவர்களின் கல்வித்தகுதி அடிப்படையில் ஆண்டுக்கு ஒரு முறை பணி உயர்வு வழங்கிட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்?

**கோரிக்கை எண். 34**

தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி உதவித் தொகையாக குறைந்தபட்சம் ரூ.20000/– வழங்கிட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்?

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, கடலூர், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட்., திருச்சிராப்பள்ளி மண்டலம்**

*[அரசாணை (டி) எண் 29, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (பி2)த் துறை, 22 ஜனவரி 2026, தை 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/51/2026.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சிராப்பள்ளி மண்டலம் என்ற நிருவாகத்திற்கும் கோவை, நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள் பாதுகாப்பு தொழிற்சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழிற்தகராறை பின்வரும் எழுவினாவுடன் திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV / 1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

**எழுவினா**

**மனுதாரர் திரு.P.சிவக்குமார், ஓட்டுநர் (பணி எண். 14761 / 12 DR 108) என்பவரின் வருடாந்திர ஊதிய உயர்வினை 6 (ஆறு) மாத காலத்திற்கு கூட்டுவிளைவின்றி தள்ளி வைத்து நிருவாகம் பிறப்பித்த இறுதி உத்தரவு எண். TNSTC/TRY/DS-1448/PNPO40/D2-2366/2022, 19.11.2022 நாளிட்ட உத்தரவினை முழுமையாக ரத்து செய்தும், வருடாந்திர ஊதிய உயர்வினை உரிய காலத்தில் வழங்கி அதற்கான சம்பளம் மற்றும் பணப்பலன்களை நிருவாகத்திடமிருந்து பெற்று வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் பாதிக்கப்பட்ட நபருக்கு கிடைக்க கூடிய நிவாரணம் என்ன? இது சம்மந்தமாக உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.**

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட்., மதுரை**

*[அரசாணை (டி) எண் 30, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (பி2)த் துறை, 22 ஜனவரி 2026, தை 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/52/2026.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிருவாகத்திற்கும் அரசு போக்குவரத்து மதுரை தொழிலாளர் சங்கம் (சிஐடியு) மதுரை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழிற்தகராறை பின்வரும் எழுவினாவுடன் மதுரை. தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV / 1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

**எழுவினா**

**திரு.B.செல்வவிநாயகம், ஓட்டுநர், (பணி எண்.CR 14496) என்பவருக்கு நிருவாகத்தின் உத்தரவு எண்.ஒநது/D3/சிப்/2601, நாள் 30.03.2024–இன்படி ஆண்டு ஊதிய ஊதிய உயர்வை இரண்டு வருடம் அதன் திரண்ட பயன்களுடன் நிறுத்தம் செய்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 07.03.2023 முதல் 05.04.2023 வரையிலான காலத்தை தகுதியுள்ள விடுப்பாக கருதியும் வழங்கிய தண்டனை உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.**

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

*[அரசாணை (டி) எண் 31, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (பி2)த் துறை, 22 ஜனவரி 2026, தை 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/53/2026.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிருவாகத்திற்கும் அரவிந்த் கெஜ்ரிவால் TNSTC தொழிலாளர் நல சங்கம், மதுரை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழிற்தகராறை பின்வரும் எழுவினாவுடன் மதுரை,

தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV / 1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

**திரு. M.ஜஸ்டின் சாம்ராஜ், ஓட்டுநர். (பணி எண்.DR 14496) என்பவருக்கு நிருவாகத்தின் உத்தரவு எண்.ஒநது/D7திம/2610, நாள்.23.03.2016–இன்படி வருடாந்திர ஊதிய உயர்வினை ஓராண்டு காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து வழங்கிய உத்தரவை ரத்து செய்யது, பாதிக்கப்பட்ட பணிப்பலன்கள் மற்றும் பணப்பலன்களை உரிய வட்டியுடன் வழங்க வேண்டுமென்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.**

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

*[அரசாணை (டி) எண் 32, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (பி2)த் துறை, 22 ஜனவரி 2026, தை 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/54/2026.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிருவாகத்திற்கும் அரவிந்த் கெஜ்ரிவால் TNSTC தொழிலாளர் நல சங்கம், மதுரை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழிற்தகராறை பின்வரும் எழுவினாவுடன் மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV / 1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

**திரு.K ஜெயசீலன், நடத்துநர், (பணி எண்.CR 12260) என்பவருக்கு நிருவாகத்தின் உத்தரவு எண். ஒநது/D3/உசிலை/41/09, நாள். 30.08.2010-இன்படி வருடாந்திர ஊதிய உயர்வை இரண்டு ஆண்டு காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 30.09.2009 முதல் 29.10.2009 வரையிலான நாட்களை சம்பளமில்லா விடுப்பாக கருதியும் வழங்கிய உத்தரவை ரத்து செய்து பாதிக்கப்பட்ட பணப்பலன்கள் மற்றும் பணிப்பலன்களை உரிய வட்டியுடனும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த நாட்களை பணி நாட்களாக கருதி அதற்குரிய சம்பளத்தையும் உரிய வட்டியுடன் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.**

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

*[அரசாணை (டி) எண் 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (பி2)த் துறை, 22 ஜனவரி 2026, தை 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.]*

No.II(2)/LWSD/55/2026.— தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிருவாகத்திற்கும் அரவிந்த் கெஜ்ரிவால் TNSTC தொழிலாளர் நல சங்கம், திருமங்கலம், மதுரை மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழிற்தகராறை பின்வரும் எழுவினாவுடன் மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV / 1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

**திரு.B.கதிரேசன், ஓட்டுநர். பணி எண்.DR 12622 என்பவருக்கு நிருவாகத்தின் உத்தரவு எண்.ஒநது/ D3/உசிலை/DR/1443, நாள் 30.11.2015-இன் படி வருடாந்திர ஊதிய உயர்வை ஓராண்டு காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் (w.c.effect) நிறுத்தம் செய்து வழங்கிய உத்தரவை ரத்து செய்து பாதிக்கப்பட்ட பணிப்பலன் மற்றும் பணப்பலன்களை உரிய வட்டியுடன் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.**

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கொ. வீர ராகவ ராவ்,
*அரசுச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU